# நல்லாட்சிக்கான
# ஒரு வழிகாட்டல்

## குடும்ப சகாய சேவை நிலையம்

இல. 259/C, கெட்டுவான பாதை
குருணாகல்.
தொ.பே. 037-2221307

# அறிமுகம்

இலங்கை அந்நியராட்சியிலிருந்து விடுபட்டு (1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்து) அறுபது ஆண்டுகள் கடந்துவிட்டாலும் இன்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பட்டியலிலேயே காணப்படுகின்றது. இக்கலப்பகுதியில் பல்வேறுபட்ட அரசியல் ரீதியான மாற்றங்களுக்கும் இலங்கை ஆளானது. ஆனாலும் இறந்த காலத்தில் நிகழ்ந்த தவறுகளும் மீண்ம் மீண்டும் இடம்பெற்றே வந்துள்ளது. 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட குடியரசு யாப்பிலும், 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்ட யாப்பிலும் அதன்பின்பு 1987 ஆம் ஆண்டில் மாகாண சபை முறை உருவாக்கப்படும்போதும் ஆட்சி முறைகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாம் கடந்துவந்த அரசியல் பாதையை திரும்பி பார்க்கும்போது அரசியல் மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையானது குறைவடைந்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனாலும் மக்கள் பிரதான அரசியல் கட்சிகளுக்கு கட்டுண்ட குருடர்களாகியுள்ளனர்.

அதேபோல் மக்கள் ஜனநாயக ஆட்சிமுறையில் தங்களது உரிமைகள், பொருளாதார பொறுப்புகள், கடமைகள், புரிந்துணர்வு மற்றும் அர்ப்பணிப்பு போன்றவை தொடர்பாக அறிவு குறைந்த மட்டத்தில் காணப்படுவதும், உறுதியானதோர் சிவில் பிரஜைகளை உருவாக்குவதற்குத் தேவையானதோர் கல்வி முறை நாட்டில் காணப்படாமையும், அல்லது இவ்வாறான அறிவினைப் பெறக்கூடிய பாடங்களைக் கற்கும் அல்லது இவ்வாறான அறிவினைப் பெறும் வாய்ப்பு குறிப்பிட்ட சிலருக்கே கிடைக்கின்றது. எனவே இந்நூலின் மூலம் நாட்டில் பல்வேறு மட்டங்களில் காணப்படும் வரவு – செலவு திட்டங்கள் தொடர்பானதொரு அடிப்படை அறிவினையும் அதேபோல் அத்துடன் தொடர்புடைய சேவைகளை தமக்கு பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுப்பதற்கு தேவையான அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அபிவிருத்தித் துறையில் சேவையாற்றும் செயற்பாட்டாளர்களுக்கு வழிகாட்டும் நோக்கிலும் “நல்லாட்சிக்கான வழிகாட்டல்” எனும் இக்கைநூல் ஓர் முன்மாதிரியான நூலாகும்.

## முக்கியமானவை

- உலக மயமாக்கலும் அதன் தாக்கமும்
- நல்லாட்சியும் தலைமைத்துவமும்
- அழுத்தம் கொடுத்தலும் உபாய ரீதியான மத்தியஸ்தமும்
- நடைமுறைப் பொருளாதார, சமூக, அரசியல் தொடர்பான உள்ளார்ந்த விபரிப்பு
- நிலையான தன்மை.

போன்ற தலைப்புகளின் கீழ் அறிவினையும் புரிந்துணர்வினையும் பெறுதல்.

# முன்னுரை

'நல்லாட்சிக்கான ஒரு வழிகாட்டல்' எனும் தலைப்பில் வெளிவரும் இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்கள் ஒரு நிமிடத்திற்கும் குறைந்த நேரத்தில் உலகம் முழுவதற்கும் பரப்புவதற்கு இயலுமை கொண்ட வகையில் இக்காலத்தில் தொடர்பாடலானது மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. மனிதனது அறிவினை வளர்ச்சியடையச் செய்வதில் தகவல் பரிமாற்றமானது முன்னிலை வகிக்கின்றது. ஆனாலும் தகவல் பரிமாற்றமானது இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருந்தாலும், உலகில் மக்கள் கட்டாயமாக தெரிந்திருக்க வேண்டிய பல தகவல்கள் மற்றும் விடயங்கள் குறிப்பட்ட சிலர் மட்டுமே தெரிந்திருப்பது கவலை தரக்கூடியதோர் விடயமாகும்.

இந்நிலையினை மாற்றமடையச் செய்யும் நோக்கில் நீண்டகால திட்டமிடலுடன் கூடிய வகையிலான இம்முயற்சியின் முதற்கட்டமாகவே "நல்லாட்சிக்கான ஒரு வழிகாட்டல்" எனும் இக்கைநூல் வெளியிடப்படுகின்றது எனக் கூறலாம். இந்நூலினை வடிவமைப்பதில் முக்கியமாக பங்கெடுத்துக் கொண்டவர்கள், ஆங்காங்கே தனிமையில் வாழ்ந்த பெண்களை ஒன்றுதிரட்டி ஒன்றிணைக்கும் நோக்கில் செயற்படும் குடும்ப சகாய சேவை நிலையத்தைச் சார்ந்தவர்களே தவிர வேறுயாருமல்ல.

பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கல்வி மட்டங்களையுடைய பெண்களை உள்ளடக்கிய அமைப்புகளுக்கிடையே, பொருளாதார ரீதியான பல்வேறுபட்ட நடத்தைகள் மற்றும் அதனோடு ஒத்த வகையிலான உள்ூராட்சி நிறுவனங்களின் வரவுசெலவுத் திட்டங்கள் தொடர்பாக தொடர்ச்சியானதோர் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டே "நல்லாட்சியினுள் பொருளாதாரம் தொடர்பான அறிவு மற்றும் வரவு-செலவுத் திட்டபகுப்பாய்வு" எனும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் வெற்றிகரமாக பங்கேற்ற பெண்களின் பெறுபேற்றினை வெளிகொணர்வதாகவே இக்கைநூல் காணப்படுகின்றது.

இதனூடாக சிவில் சமூகங்கள் சக்தி படைத்ததாக மாற்றப்பட்டதோடு மக்களின் இறைமைக்கு தகுந்த மதிப்பினை வழங்கக் கூடியதோர் நல்லாட்சியினை உறுதிப்படுத்தக்கூடியதொரு சூழ்நிலை உருவானது. குடும்ப சகாய சேவை நிலையத்தின் வழிகாட்டலின் கீழ் இச்செயற்பாட்டிற்கு தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கிய குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த சிறியலவிலான பெண்கள் அமைப்பினைச் சார்ந்தவர்களது பலமும் தைரியமும் இந்நாட்டில் வாழும் மக்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தமக்கிருக்கின்ற உரிமையினை அரசியல் யாப்பில் உள்ளடக்குவதற்கு முயற்சித்த முன்னோடிகள் என்று குறிப்பிட்டால் அது தவறில்லை. இறுதியாக, மக்கள் மத்தியில் காணப்படும் அனைத்து பெறுமதிமிக்க தகவல்களும் அனைவருக்கும் கிடைக்கும் வகையிலான தொடர்பாடல் முறை ஒன்று உருவாக வேண்டும் என வாழ்த்துவோம்.

துஸித சிறிவர்த்தன<br>
பணிப்பாளர் (கொள்கையாக்கம்)<br>
அக்ஷன் எயிட் - இலங்கை நிறுவனம்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 01. | பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல் | | 1-3 |
| 02. | பயிற்சி செயலமர்வுகளை நடத்துதல் | | |
| | 02.1 | முதலாவது அமர்வு | 4-7 |
| | 02.2 | இரண்டாவது அமர்வு | 8-10 |
| | 02.3 | மூன்றாவது அமர்வு | 11-15 |
| | 02.4 | நான்காவது அமர்வு | 15-16 |
| | 02.5 | ஐந்தாவது அமர்வு | 17 |
| | 02.6 | ஆறாவது அமர்வு | 18 |
| | 02.7 | ஏழாவது அமர்வு | 19-23 |
| | 02.8 | எட்டாவது அமர்வு | 23 |
| 03. | நிறைவு | | 24 |
| 04. | நன்றி | | 25 |

# பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்

**01. பயிற்சி செயலமர்வுகள், மக்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் முறைசாரா கல்வியினையும் கருத்திற்கொண்டே ஒழுங்கு செய்யப்பட்டன.**

அதற்கமைய....

1.1 குறித்த சிவில் சமூக குழுக்களுடன் கலந்துரையாடி அவர்களது வசதிக்கேற்ப கால, நேரங்களை தீர்மானித்தல்

1.2 சிறிய (குறுகிய நேர) அமர்வுகளை நடத்துதல் (2.30. மணி நேரம்)

1.3 இலகுவான மொழிநடையினை பயன்படுத்தல்

1.4 மீள் நினைவூட்டல் (மீட்டல்) பயிற்சிகளை நடத்துதல்

1.5 ஏனையோருடன் அனுபவங்களையும், அறிவினையும் பகிர்ந்து கொள்ளக் கூடிய வகையில் சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் ஒழுங்குசெய்தல்

1.6 சிவில் சமூக குழுக்களது அனுபவங்களையும் அறிவினையும் பயன்படுத்தக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

1.7 பணிகளை திட்டமிடும்போது மக்களையும் இணைத்துக்கொண்டு, பொறுப்புகளையும் பகிர்ந்தளித்து அவர்களையும் குறித்த செயற்பாட்டில் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு இதன் நிலையான முன்னேற்றத்திற்கு கவனம் செலுத்த வேண்டும்.

**02. இவ்வாறான பயிற்சி கற்கைநெறிகளை வடிவமைக்கும்பொழுது குடும்ப சகாய சேவை நிலைய அலுவலர்கள் கையாளும் தகவல்கள்**

2.1 முதற்கட்ட பயிற்சிநெறியின் குறிப்புகளும் அவற்றின் சிங்கள மொழியிலான மொழிபெயர்ப்பும்

2.2 உயர்தரம், மற்றும் பட்டப்படிப்பு ஆகிய மட்டங்களில் பயன்படுத்தப்படும் பொருளியல் மற்றும் அரசியல் விஞ்ஞான பாடக் குறிப்புகள்.

2.3 வடமேல்மாகாண சபையின் வரவுசெலவுத் திட்டம் - 2008

2.4 பொல்பிதிகம பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் - 2007

2.5 குருணாகலை பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் - 2007

2.6 (வடமேல்) கிராம அபிவிருத்தி திட்டம் - 2007

2.7 மகிந்த சிந்தனை

2.8 நிறுவன சட்டக் கோவை

2.9 அரச அதிகாரம் மற்றும் அதிகார வேராக்கல் எனும் நூல்

2.10 நவீன அரசு தொடர்பான விபரிப்பு – கைநூல்

2.11 வடமேல் மாகாண சபையின் வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு

2.12 அரசியல் கட்சிகளின் பல்வேறுபட்ட துண்டு பிரசுரங்கள்

2.13 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்

2.14 பாராளுமன்ற உறுப்பினர்களது உரைகளின் தொகுப்பு

## 03. செயலமர்வுகளை நடத்துவதற்கு பின்பற்றப்பட்ட வழிமுறைகள்

3.1 குழுக்களின் கருத்துக்களை கேட்டறிதல்

3.2 OHP – கருவியினை பயன்படுத்துதல்

3.3 சிறிய விரிவுரைகள்

3.4 குழு வேலைகளும் செயற்பாடுகளும்

3.5 மீள் நினைவூட்டல் செயற்பாடுகள் (மீட்டல்)

3.6 குறிப்பெடுப்பதற்கு தூண்டுதல்

3.7 குழு வேலைகளை (ஒப்படை) கொடுத்தலும் அவற்றை மீண்டும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தலும்

3.8 தகவல்களை திரட்டுவதற்கு ஊக்குவித்தல்

3.9 குழுக்களின் கருத்துக்களை தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கும்போது பயிற்சியின் தலைப்பு பொருத்தமாகவுள்ளதா என ஆராய்தல்

3.10 மக்கள் சார்பான வரவு செலவுத்திட்டம் (பிரதேச சபை) ஆய்வு நோக்கத்திற்காக தெரிவு செய்து கொள்ளுதல்

3.11 அரச நிறுவனங்களை இனம் காணுதலும் அந்நிறுவனங்களினால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு ஊக்கமளித்தலும்

# பயிற்சி செயலமர்வுகளை நடத்துதல்

*முதலாவது அமர்வு*

1. தலைப்பு – அரச வரவு செலவு திட்டத்தினை பகுப்பாய்வு செய்தல் என்பதனை விளக்குதல்.

   - அரசு – குறித்த எல்லை (ஆட்புல பிரதேசம்) நிலம், ஆகாய எல்லைகளுடன் கூடிய ஓர் அதிகார பரப்பு
   - வரவு – மொத்த வருமானம்
   - செலவு – மொத்த செலவீனம்
   - பகுப்பாய்வு – பகுதிகளாக பிரித்து ஆய்வு செய்தல்

2. தலைப்பு – வரவு செலவு திட்டத்தினை (Budget Estimate) விளக்குதல்



3 **தலைப்பு – அரச வரவு-செலவினை மூன்று மட்டங்களில் அறிமுகம் செய்தல்**

- தேசிய வரவு செலவுத்திட்டம் - குறித்த ஒரு நாட்டின் (அடுத்து) எதிர்வரும் நிதி ஆண்டில் அரசாங்கத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு உருவாக்கப்படும் வருமானங்களையும் செலவீனங்களையும் உள்ளடக்கிய ஒரு நிதி திட்டமிடலே இதுவாகும். இது வரவு-செலவுத்திட்ட திணைக்களத்தின் மூலமே தயாரிக்கப்படுகின்றது.

- மாகாண சபை வரவு-செலவுத்திட்டம் - குறித்த ஒரு மாகாண சபையின் எதிர்வரும் ஆண்டில் தமது இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கில் தயாரிக்கப்படுகின்ற வருமானம் செலவீனங்களை உள்ளடக்கிய ஒரு நிதிதிட்டமிடலே இதுவாகும். இது குறித்த மாகாண சபைகளிலேயே தயாரிக்கப்படுகின்றன.

- பிரதேச சபை வரவு-செலவுத் திட்டம் - குறித்த ஒரு பிரதேச சபையின் எதிர்வரும் ஆண்டில் தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்படுகின்ற வருமானம் மற்றும் செலவீனங்களை உள்ளடக்கிய ஒரு நிதி திட்டமிடல இதுவாகும். இது குறித்த பிரதேச சபைகளிலேயே தயாரிக்கப்படுகின்றன.

4 **தலைப்பு – அரச வரவு – செலவினை அறிமுகம் செய்தல்**

- அரச வருமானங்கள் (வரவு)
  - வரி

    நேரடி வரி – வரி செலுத்துபவர்கள் மூலம் நேரடியாக அரசாங்கத்தினால் வரி அறவிடப்படுதல்
    (உ-ம்) – வருமான வரி, சொத்து வரி, பணத்திற்கான வரி போன்றன.

  - மறைமுக வரி – வரி செலுத்துபவருக்கு நேரடியாக தாம் வரி செலுத்துகின்றோம் என்று தெரியாது. அரசாங்கமானது வரியினை அறவிடுதல்
    (உ-ம்) - இறக்குமதி வரி, வெட் வரி, உற்பத்தி வரி

  - தேசிய வருமானம் : அரச சொத்துக்களை வியாபாரங்களுக்காக பயன்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வருமானம், சேவைக் கட்டணங்கள், நன்கொடைகள்.

  - வெளிநாட்டு வருமானம் : சேவைகள், நன்கொடைகள், உதவிகள்

  - கடன் - அரச வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் குறையினை (துண்டு விழுதல்) நிரப்புவதற்காக பெற்றுக் கொள்ளப்படும் தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன்கள்

- **அரச செலவீனங்கள் (செலவு)**
  - நடைமுறை செலவுகள்
    நாட்டினை நடாத்திச் செல்வதற்கு தேவைப்படும் நடைமுறை செலவுகள் மற்றும் அரசாங்கத்தினால் செலவளிக்கப்படும் கட்டாய செலவுகள்
    (உ-ம்) : அரசாங்க சம்பளங்கள், உதவிகள், அரச சொத்துக்களை பராமரிப்பதற்கான செலவீனங்கள் போன்றன.

  - முதலீட்டுச் செலவுகள்
    நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவீனங்கள்.
    (உ-ம்) : பாதைகள், நீர்ப்பாசன அபிவிருத்தி, கட்டிடங்கள் போன்றன.

  - கடன்கள் மற்றும் வட்டி
    தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பெற்றுக் கொள்ளப்படட கடன்கள் மற்றும் அதற்கான வட்டி தொகைகள் என்பன இதன் கீழ் உள்ளடங்கும்.

5. **மாகாண சபையின் வருமானங்கள் மற்றும் செலவீனங்களை அறிமுகம் செய்தல்**

- மாகாண சபையின் வருமானங்கள்
  - தேசிய வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்படும் நிதி
  - மாகாண சபைக்கு செலுத்தப்படும் வரிகள் (வரிப்பணம்)
  - மாகாண சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மூலம் கிடைக்கப்படும் வருமானங்கள்
  - நன்கொடைகள் (உள்@ர் அல்லது சர்வதேச)

- மாகாண சபையினது செலவீனங்கள்
  - முதலீட்டுச் செலவுகள் (மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுபவை)
  - நடைமுறைச் செலவுகள்
    குறித்த மாகாணத்தினையும் மாகாண சபையினையும் நிர்வகிப்பதற்கும், செயற்படுத்துவதற்கும் ஏற்படும் செலவீனங்கள்

முதலாவது அமர்வின் நிறைவின்போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு:-

இலங்கையின் அரச வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் பிரதான மட்டங்கள் தொடர்பாகவும் மாகாண சபைகளின் வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் தொடர்பானதொரு பருமட்டான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுப்பதேயாகும்.

6. மாகாண சபையின் கட்டமைப்பு

## அமைப்பாக்கம்



*இரண்டாவது அமர்வு*

7 தலைப்பு – பிரதேச சபை

- **கடடமைப்பு**

பிரதேச சபை
↓
பிரதேச சபைத் தலைவர்
↓
பிரதேச சபை செயலாளர்
↓
பிரதேச சபை உறுப்பினர்கள்

- தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடு

  பிரதானமாக நான்கு கமிட்டிகள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

  அவையாவன,
  1) சூழல் மற்றும் வசதிகள் ஏற்படுத்தல் கமிட்டி
  2) கைத்தொழில் கமிட்டி
  3) நிதி மற்றும் கொள்கையாக்கள் கமிட்டி
  4) வீடமைப்பு மற்றும் மக்கள் அபிவிருத்தி கமிட்டி

பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தின் போதே பொதுவாக பெரும்பான்மை விருப்பிற்கு ஏற்ப தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். பெரும்பான்மை விருப்பு கிடைக்காத சந்தர்ப்பத்தில் தீர்மானம் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்படும். நிதி தொடர்பான விடயங்களின்போது கட்டாயமாக காசோலைகளில் பிரதேச சபைத் தலைவரும் செயலாளருமே கையொப்பமிடுவர். தேவைப்படும் போது மேலதிக இரண்டாவது கையொப்பத்தினையிடும் அதிகாரம் கணக்காளருக்கே காணப்படுகின்றது.

- பிரதேச சபைகளில் மக்களின் யோசனைகளை செயற்படுத்தல்

மக்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதன் மூலம் குறித்த கமிட்டிக்கு மக்களின் யோசனைகள் கொண்டு செல்லப்படுகின்றன. அதன்பின்பு மகா சபைக்கு இவ்விடயங்கள் கொண்டு செல்லப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். (மகா சபையானது, தலைவர், செயலாளர். உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கியிருக்கும்) இதன் பின்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

நிதி கமிட்டி

↑

பொதுச் சபை

↑

குறித்த கமிட்டி

↑

பிரதேச சபை உறுப்பினர்

↑

பொதுமக்களது கருத்துக்களும் யோசனைகளும்

- **பிரதேச சபையின் வருமானங்கள் மற்றும் செலவீனங்களை அறிமுகம் செய்தல்**
  - ➤ பிரதேச சபையின் வருமானங்கள்
    - வரி
    - கூலி
    - அனுமதிச் சீட்டுக்கான கட்டணங்கள்
    - சேவைக் கட்டணங்கள்
    - தண்டப் பணங்கள்
    - ஏனைய வருமானங்கள்
    - நன்கொடைகள்
    - முதலீட்டுக்கான நிதி உதவிகள்
    - அரச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதி மற்றும் மாகாண சபை மூலம் கிடைக்கப்படும் வருமானங்கள்.

      * பிரதேச சபை உறுப்பினர்களுக்கான சம்பள ஒதுக்கீடுகள்

      * பிரதேச சபை அதிகாரிகளுக்கான சம்பள ஒதுக்கீடு (நிதி)

      * பிரதேச சபையின் காரியாலய மற்றும் உபகரணங்களின் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீடுகள்

      * பிரதேச சபை அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள்

      * பிரதேச சபை உறுப்பினர்களின் நிதியத்திற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள்

- பிரதேச சபையின் செலவுகள்

    - நடைமுறை செலவுகள் :- பிரதேச சபையினதும் அக்குறித்த பிரதேச சபையின் எல்லைப் பிரதேசத்திற்குமான பராமரிப்பு செலவுகள்

      (உ-ம்) : சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், போக்குவரத்துச் செலவுகள், உபகரணங்கள், சொத்துக்களைப் பராமரித்து புதுப்பித்தலுக்கான செலவுகள், நன்கொடைகள், உதவித்தொகைகள் மற்றும் சகாயப்படிகள், போக்குவரத்து சேவைகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

    - **முதலீட்டு செலவுகள்**

      பிரதேச சபையினதும் குறித்த பிரதேசத்தினதும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிதி.

- பிரதேச சபை வரவு செலவு திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் செயற்திட்ட நிகழ்ச்சிகள்

    - செயற்திட்ட நிகழ்ச்சி 01 – பொது நிர்வாகம்
    - செயற்திட்ட நிகழ்ச்சி 02 – சுகாதார சேவை
    - செயற்திட்ட நிகழ்ச்சி 03 – பௌதீக திட்டமிடல் மற்றும் காணிகள்
    - செயற்திட்ட நிகழ்ச்சி 04 – நீர் முகாமைத்துவ சேவை
    - செயற்திட்ட நிகழ்ச்சி 05 – பொது சேவைகள்
    - செயற்திட்ட நிகழ்ச்சி 06 – நலன்புரி சேவைகள்

    (தேவைக்கேற்ப நிகழ்ச்சி இலக்கங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்)

குறிப்பு : இரண்டாவது அமர்வின் நிறைவின்போது அடைந்து கொளவதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு: பிரதேச சபை கட்டமைப்பு, தீர்மானம் மேற்கொள்ளுதல், வரவு செலவுகள் தொடர்பாக ஓர் புரிந்துணர்வினைப் பெற்றுக் கொடுத்தல்.

*மூன்றாவது அமர்வு*

8. தலைப்பு – முதலாவது மற்றும் இரண்டாவது அமர்வினை மீள நினைவூட்டுதல் (மீட்டல்) (ஐந்து பெண்கள் குழுக்களையும் ஒன்றிணைத்து)

டிமை பேப்பர் மற்றும் ப்லாஸ் கார்ட்களில் பின்வரும் வினாக்கள் எழுதப்பட்டிருந்தன.

01 ஆவது வினா - இக்கற்கையின் நோக்கம் என்ன?

02 ஆவது வினா - அரசு என்றால் என்ன?

03 ஆவது வினா - வரவு செலவு திட்டம் என்றால் என்ன?

04 ஆவது வினா - பகுப்பாய்வு என்பது என்ன?

05 ஆவது வினா - அரச வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை மட்டங்கள் காணப்படுகின்றன? அவை எவை?

06 ஆவது வினா - இலங்கையில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?

07 ஆவது வினா - அவை எவை? (7.1, 7.2, 7.3 என மூவர் விடையளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது)

08 ஆவது வினா - ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் பாராளுமன்றத்திற்கு எந்த மட்டத்தினைச் சார்ந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது?

09 ஆவது வினா - பாராளுமன்றத்திற்கு வரவு செலவு திட்டத்தினை சமர்ப்பிப்பவர் யார்?

10 ஆவது வினா - தற்போது எமது நாட்டின் நிதி அமைச்சர் யார்?

11 ஆவது வினா - எந்தவொரு வரவு செலவுத் திட்டமும் எவ்வாறான பகுதிகளை உள்ளடக்கியிருக்கும்?

12 ஆவது வினா - கிராமத்திற்கு நன்மை தரக்கூடிய விடையங்கள் வரவு செலவு திட்டத்தில் எந்த மட்டத்தில் காணப்படுகின்றது?

13 ஆவது வினா - பிரதேச சபைக்கு வருமானம் கிடைக்கின்ற இரண்டு வழி வகைகள் எவை?

14 ஆவது வினா - அரச வரவு செலவு திட்டத்தினால் பிரதேச சபைகளுக்கு எதனை கருததிற்கொண்டு நிதி ஒதுக்கப்படுகின்றது? (14.1, 14.2, 14.3, 14.4, 15.5, என ஐவர் தனித்தனியே விடையளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது)

15 ஆவது வினா - பிரதேச சபைகளுக்கு மக்களினால் கிடைக்கும் வருமானங்கள் எவை? (15.1, 15.2, 15.3, 15.4, 15.5 என ஐவர் தனித்தனியே விடையளிக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது)

16 ஆவது வினா - பிரதேச சபைகளில் அனைத்து வருமானங்களும் எத் துறையில் திரட்டப்படுகின்றது?

17 ஆவது வினா - பிரதேச சபையில் எத்தனை கமிட்டிகள் காணப்படுகின்றன?

18 ஆவது வினா - அக்கமிட்டிகளை பெயரிடவும் (18.1, 18.2, 18.3, 18.4 என நான்கு வினாக்களாக பிரித்து நாள்வருக்கு விடையளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன)

19 ஆவது வினா - பிரதேச சபைக் கமிட்டிகளின் பிரதிநிதிகள் யார்?

20 ஆவது வினா - பிரதேச சபைகளுக்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன?

21 ஆவது வினா - பிரதேச சபைகளில் தீர்மானம் மேற்கொள்வதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் காணப்படும் பிரதான இரண்டு குழுக்களும் எவை?

22 ஆவது வினா - மேற்கூறப்பட்ட இரண்டு குழுக்களில் எந்த குழு நிரந்தரமானது?

23 ஆவது வினா - பிரதேச சபைகளில் காசோலைகளுக்கு கையொப்பமிடும் அதிகாரம் யாரிடம் காணப்படுகின்றது?

9 தலைப்பு – **பிரதேச செயலகம்**

- பிரதேச செயலகத்தின் ஆரம்பம்

அரசாங்கமானது வெற்றிகரமாக ஆட்சியினை நடத்துவதற்காக அமைச்சர்களின் தலைமையின் கீழ் பல அமைச்சுக்களை உருவாக்கியுள்ளது. அதற்கமைய மக்களின் அன்றாட பரிபாலன நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உள்நாட்டு அலுவலகள் அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு அலுவலக்கள் அமைச்சு தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்பு அரசாங்க அதிபர் காரியாலயங்களை அமைத்து அதன் கட்டுப்பாட்டின் கீழ் பிரதேச வருமான நிர்வாக காரியாலயங்கள் மற்றும் கிராம சேவையாளர் காரியாலயங்கள் அமைக்கப்பட்டன.

இலங்கையில் முதன் முதலாக 1989 ஆம் ஆண்டிலேயே பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டன. இச்செயலகங்கள் ஏற்கனவே காணப்பட்ட பிரதேச வருமான

நிர்வாக காரியாலயங்கள் அல்லது அரசாங்க அதிபர் காரியாலயங்கள் போன்றவற்றினை மேலும் அபிவிருத்தி செய்ததனைப் போன்றே காட்சியளிக்கின்றன. தூர பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு வருகை தருவதில் காணப்படும் இடர்பாடுகளை நீக்கி மிகவும் செயற்திறன் மிக்கதோர் சேவையை மக்களுக்கு வழ்ங்குவதுடன் அரசாங்க அதிபர் காரியாலயம் மற்றும் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களின் சேவைகளை மக்களுக்கு இலகுவில் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டும் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன.

- **பிரதேச செயலகத்தின் பிரதான நடவடிக்கைகளும் அத்துடன் தொடர்புடைய அதிகாரிகளும்.**

  ➤ பொதுவாக ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வறையிலான காலப்பகுதியில் அவனது அன்றாட நடவடிக்கைகளில், அரசாங்கத்தின் மூலம் அவனுக்கு கிடைக்கப்பட வேண்டிய சேவைகளில் பெரும்பானவற்றை அவன் பிரதேச செயலகத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும், **அவையாவன,**

    ★ பிறப்பினை பதிவுசெய்தல் மற்றும் பிறப்பத்தாட்சி பத்திரத்தினைப் பெற்றுக்கொடுத்தல், அத்தூடன் அதன் பிரதிகளையும் வழங்குதல்.

    ★ மரணப்பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் அதனை அத்தாட்சிப்படுத்தல்

    ★ சமூக சேவைக்கான நன்கொடைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

    ★ காணி தொடர்பான பிரச்சினைகளைப் தீர்த்துவைப்பதோடு காணியுறுதிப் பத்திரம் இல்லாது குறித்த காணிகளில் வசிப்பவர்களுக்கு சட்டரீதியாக காணியுறுதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவுதல்

    ★ வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய இயற்க்கை அநர்த்தங்களின்போது பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு உணவு, உடை தங்குமிடவசதிகள் போன்றவற்றினை வழங்குவதோடு அவர்களை மீண்டும் இயல்பு வாழ்கை நிலைக்கு கொண்டுவருவதற்கான அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

    ★ மக்கள் வங்கிகடன்களை பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அவர்களது வருமானத்தினை உறுதிப்படுத்திக் கொடுத்தல்.

    ★ நெற்பயிர்ச் செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு தேவையான கூட்டங்களை நடத்துவதற்கு இத்துறையோடு தொடர்புடைய அதிகாரிகளை இணைத்துக்கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

    ★ அரசாங்கத்தினால் கிடைக்கவேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

    ★ வறுமையில் வாடும் குடும்பங்களுக்குத்தேவையான நிதியுதவி, காணி, கல்வி போன்ற உதவிகளை குறித்த நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து மற்றும் ஆலோசனைகளை வழங்கி அவற்றைப் பெற்றுக் கொடுத்தல்.

- ★ திடீர் தொற்றுநோய்கள் பரவும் சந்தர்ப்பத்தில் குறித்த சுகாதார சேவைகள் பிரிவுகளோடு இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ★ மக்கள் மத்தியில் பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் தோன்றும் போது அவற்றை தீர்த்துவைக்கும் நோக்கில் பாதுகாப்பு உத்தியொகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- ★ பிரதேசத்தின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய வீதிகள் நீர், மின்சாரம் போன்ற பொது உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிகடகைககளை மேற்கொள்ளுதல்.
  (உ+ம்) பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்தல்.
- ★ மத மற்றும் கல்வி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ★ மக்களுக்குத் தேவையான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல் (உ+ம்) தடைசெய்யப்பட்ட மர வகைகளை கொண்டு செல்வதற்குத் தேவையான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல். மரங்களை வெட்டுவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல், அரச காணிகளை பயன்படுத்துவதற்கு அனுமதியளித்தல் போன்றன.
- ★ மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் பதிவு செய்தல்

பிரதேச செயலகத்தினூடாக மக்களின் யோசனைகள் மற்றும் வேண்டுகோள்களும் செயற்படுத்தப்படும் படிநிலைகள்.



- **பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட கமிட்டி**

  இச்செயற்பாடானது ஒவ்வொரு மாதமும் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் பின்வருவோர் இக்கமிட்டியில் அங்கத்தவர்களாக தொழிற்படுவர்.

  தலைவர் – ஓர் உறுப்பினர் அல்லது அமைச்சர்

  செயலாளர் – மாவட்டச் செயலாளர்

  உறுப்புரிமை – பிரதேச செயலாளர்கள்

குறிப்பு:- இரண்டாவது அமர்வின் முடிவின்போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு:- அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதனூடாக தமது அறிவுத் திறனை புதுப்பித்தல், பிரதேச செயலகத்தின் ஆரம்பம், சேவைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அதிகாரிகள், மக்களது யோசனைகளும் வேண்டுகோள்களும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடு போன்றவை தொடர்பாக அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல்.

*நான்காவது அமர்வு*

10 தலைப்பு – பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தலைப்புகளை (பிரதான விடயங்கள்) தெளிவுபடுத்தல்.
(அட்டவணை இல -01 ஐப் பார்க்கவும்)
* மதிப்பீடு
* பராமரிப்பு வருமானம் / செலவீனம்
* முதலீட்டு வருமானம் / செலவீனம்
* நிகழ்ச்சி செயற்திட்ட இலக்கம்
* வருமான குறிகாட்டி (அடையாளம்)
* வரவுசெலவுத் திட்டத்தின் விடயப்பரப்பு
* வரவு செலவுத் திட்டத்தின் மிகத் தன்மை (மேலதிகம்)
* வரவு செலவுத் திட்டத்தின் குறைபாடு

- தொகைகளை முறையாக வாசிப்பதற்கு பழக்கப்படுத்தல்

| | |
|---:|---|
| .00 | சதம் |
| 1.00 | ரூபாய் |
| 10.00 | பத்து ரூபாய் |
| 100.00 | நூறு ரூபாய், |
| 1,000.00 | ஆயிரம் ரூபாய் |
| 10,000.00 | பத்தாயிரம் ரூபாய் |
| 100,000.00 | ஒரு இலட்சம் ரூபாய், |
| 1,000,000.00 | பத்து இலட்சம் ரூபாய் (ஒரு மில்லியன்) |
| 10,000,000.00 | நூறு இலட்சம் ரூபாய் (ஒரு கோடி) |

குறிப்பு – நான்காவது அமர்வின் முடிவின்போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் விடயம் என்னவென்றால் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தின் வியூகம் தொடர்பான அறிவினைப் பெறுதலே ஆகும்.

## அட்டவணை இல. 01

| வருமானமும் வரவு தொடர்பான தலைப்பும் | பொது நிர்வாகம் | சுகாதார சேவை | பௌதீக திட்டமிடல் வீதிகள், காணிகள | நீர் விநியோகம | பொது பாவனை சேவைகள | நலன்புரி சேவைகள | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10. வரி பணம் மற்றும வரிகள் | 10845.00 | 10,000.00 | | | 10,000.00 | 30845.00 | | 0.15 |
| 20. குத்தகை மற்றும் கூலி | 25,000.00 | 2151600.00 | | 2176600.00 | | 10.92 | | |
| 30. அனுமதி பத்திர கட்டணங்கள் | 51,000.00 | 625,000.00 | 445,000.00 | | | 1121,000.00 | | 5.62 |
| 40. சேவைக் கட்டணங்கள் | 5712,000.00 | 20,000.00 | | 145,000.00 | | 50,000.00 | 5927000.00 | 29.76 |
| 50. தண்டப்பணம் | | | 310,000.00 | | 25,000.00 | 10,000.00 | 345000.00 | 1.73 |
| 60. ஏனைய வருமானங்கள் | 180,000.00 | 25,000.00 | | 3500.00 | 20,000.00 | 228500.00 | | 1.14 |
| 70. உதவி -வருமானங்கள் | 4200,000.00 | 1100,000.00 | 3450,000.00 | 400,000.00 | 950,000.00 | 10100,000.00 | | 50.68 |
| மொத்த வருமானம் | 10153845.00 | 1780,000.00 | 4205,000.00 | 570,000.00 | 21801,000.00 | 1040,000.00 | 19928945.00 | 100 |
| 01. சம்பளம் மற்றும் படிக்ள் | 4320,000.00 | 1200,000.00 | 3250,000.00 | 360,000.00 | 26500.00 | 1025,000.00 | 10181500.00 | 54.51 |
| 02. போக்குவரத்துச் செலவுகள் | 130500.00 | 55500.00 | 55500.00 | 55500.00 | 5,000.00 | 7000.00 | 309000.00 | 1.65 |
| 03. சேவை வழங்குதல் | | | | | | | | |
| மற்றும் உபகரணங்கள் | 635000.00 | 217500.00 | 60,000.00 | 130,000.00 | 70,000.00 | 513,000.00 | 1725500.00 | 9.24 |
| 04. முதலீட்டுச் சொத்துக்களைப் புதுப்பித்தல் | 600,000.00 | 175000.00 | 2500,000.00 | 75,000.00 | 305000.00 | | 4055000.00 | 21.71 |
| 05. போக்குவரத்துடன் தொடர்புடைய அத்தியாவசிய சேவைகள் | 403,000.00 | 10,5000.00 | 25,000.00 | 68,000.00 | 290,000.00 | 6,000.00 | 951000.00 | 5.19 |
| 06. வட்டிகள், இலாபங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் | | | | | | | | |
| 07. உதவித் தொகைகள் மற்றும் நிதியுதவிகள் | 10500.00 | 10,000.00 | 5000.00 | 5000.00 | - | 1185,000.00 | 1215500.00 | 6.51 |
| 08. ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் பணிக்கொடைகள் | 45220.00 | 74440.00 | 30,000.00 | 32220.00 | - | 57220.00 | 239100.00 | 1.28 |
| புனர்நிர்மாண செலவுகள் - மொத்தம் | 6144220.00 | 1837440.00 | 6025500.00 | 725720.00 | 496500.00 | 3247220.00 | 18676600.00 | 100 |
| மேலதிக -குறைபாடு | 4009625.00 | (-57440.00) | (-1820500.00) | (-155720.00) | 14836000.00 | (-2207220.00) | 1252345.00 | |
| முதலீட்டுச் செலவுகள் (சபையின் நிதியம்) | 100,000.00 | 200,000.00 | 200,000.00 | 400,000.00 | 100,000.00 | 200,000.00 | 1200000.00 | |
| மிகை நிலை | | | | | | 52345.00 | | |

*ஐந்தாவது அமர்வு*

11. தலைப்பு – பிரதேச சபையின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிகழ்ச்சித்திட்டம், இலக்கம் - 6, நலன்புரி சேவைகள்

- மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நிர்வாக நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி தொடர்பாக விபரித்தல்

## நிகழ்ச்சித்திட்ட இலக்கம் - 06 – நலன்புரி சேவைகள்

| செலவீனமும் செலவு தொடர்பான தலைப்பும | 2005 - உண்மைச் செலவு | 2006 திட்டமிடப்பட்ட செலவு | 2007 திட்டமிடப்பட்ட செலவு |
|---|---|---|---|
| 601 சம்பளமும் கொடுப்பனவுகளும் | 908,993.63 | 8000,000.00 | 9000,000.00 |
| 601(3) உதவிக் கொடுப்பனவுகள் | | | 125,000.00 |
| | 908,993.68 | 800,000.00 | 1,025,000.00 |
| 602 போக்குவரத்துச் செலவுகள் | 1,020.00 | 2,500.00 | 5,000.00 |
| 602(3) மாற்று போக்குவரத்துச் செலவுகள் | | 2,500.00 | 2,000.00 |
| மொத்தம் | 1,020.00 | 5,000.00 | 7,000.00 |
| 603 சேவை வழங்களும் உபகரணங்களும | | | |
| 603(1) காரியாலயம் மற்றும் காகிதாதிகள் | 277.95 | 200,000.00 | 200,000.00 |
| 603(2) எரிபொருள் மற்றும் எண்ணெய் வகைகள் | | 2,000.00 | 3,000.00 |
| 603(3) ஆரம்ப பாடசாலைக்கான பொருட்கள் செலவுகள் | | | 200,000.00 |
| 603(7) சீருடை | | | |
| 1. காரியாலயம் | 4,005.00 | 5,000 | 10,000 |
| 2. ஆரம்பப் பாடசாலை | 74,025.00 | 75,000.00 | 100,000.00 |
| மொத்தம் | 167,307.95 | 282,000.00 | 513,000.00 |
| 604 - மூலதனச் சொத்துக்களை புதுப்பித்தலும் பராமரித்தலும் | | | |
| 604 (1) மயான பூமி | | | 400,000.00 |
| மொத்தம் | | | 400,000.00 |
| 605 போக்குவரத்துத் தொடர்பும் தேவையான சேவைகளும் | | | |
| 605 (1) போக்குவரத்து | | 5,000.00 | 5,000.00 |
| 605 (3) அத்தியாவசிய சேவைகள் | | | |
| (7) மின்சாரம் | 7,836.95 | 35,000.00 | 50,000.00 |
| (8) நீர் | 7,836.95 | 46,000.00 | 60,000.00 |
| 607 நிதி நன்கொடைகள் மற்றும் உதவிகள் | | | |
| 607(1) பிரஜாமண்டபங்கள் மற்றும் நூலகங்கள் | | 50,000.00 | 100,000.00 |
| 607(2) நலன்புரி சேவை கொடுப்பனவுகள் | 90,000.00 | 180,000.00 | |
| 607(3) முன்பள்ளி நிருவாகியின் உதவியாளர் | | 400,000.00 | |
| 607 (4) இராணுவ குடும்பங்களுக்கான நலன்புரி சேவை | | | 100,000.00 |
| 607(5)புகையிரத அனுமதிச் சீட்டு | | 5,000.00 | 5,000.00 |
| 608(6) பாலர் பாடசாலை உபகரணங்கள் | | | 400,000.00 |
| மொத்தம் | 90,000.00 | 145,000.00 | 1,185,000.00 |
| (608) ஓய்வூதிய கொடுப்பனவுகள் | | | 32,220.00 |
| 608(2)ஓய்வூதிய கொடுப்பனவுகள் (ஊ.சே.லா.நி) | | | 12,000.00 |
| 608(8) ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகள் | 17,411.40 | 16,000.00 | 13,000.00 |
| கூட்டு மொத்தம் | 1,192,569.98 | 1,294,000.00 | 3,247,220.00 |

குறிப்பு : ஐந்தாவது அமர்வின் நிறைவின் போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு – வரவு செலவுத் திட்ட அறிக்கையினை வாசித்தறிந்து அதன் நிதி ஒதுக்கீடுகளுக்கிடையே காணப்படும் வித்தியாசங்களை இனம் காணுவதற்குத் தேவையான அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொடுத்தல்.

*ஆறாவது அமர்வு*

12. தலைப்பு – **அரசதிகாரம் (இறைமை)**

- **நவீன அரசின் கட்டமைப்பினை அறிமுகம் செய்தல்**

  இறைமை அதிகாரம் என்பது மக்களின் விருப்பு என்பதே பொருளாகும். இது தேர்தலின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ் அரசதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமே அரசாங்கமாகும்.

  சட்ட உருவாக்கம், சட்டம் அமுல்படுத்தப்படல், சட்டத்தினை பாதுகாத்தல் (நீதிமன்றம்) என்பதனூடாகவேஅதிகாரமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனை நாம் பாராளுமன்றம், நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை என கூறலாம்.

- **பாராளுமன்றம் என்பது:-** நாட்டு மக்கள் அனைவரது விருப்பிற்கு ஏற்ப சட்டத்தினை உருவாக்கும் நிறுவனம். நிலப்பரப்பு மற்றும் மக்கட் தொகை என்பவற்றின் மிகப் பெரிய அதிகரிப்பின் காரணமாகவும் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதனாலும் நவீன காலத்தில், மக்களின் பிரதிநிதிகள் (தேர்தல் மூலம்) பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக செயற்படுகின்றனர்.

- **பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்**
  - ✓ சட்டங்களை உருவாக்குதல்
  - ✓ நிர்வாகத்துறையை கட்டுப்படுத்துதல்
  - ✓ அரச நிதியினை பரிபாலனம் செய்தல்
  - ✓ நீதித்துறைச் செயற்பாடுகளுக்கு உதவுதல்
  - ✓ நியமனங்களை மேற்கொள்ளுதல்
  - ✓ யாப்பு சீர்திருத்தம்

- **நிர்வாகத்துறை என்பது :**
  நவீன அரசில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிறுவனமாகும். இதனை அரசாங்கம் என்றும் கூறலாம். தற்காலத்தில் இத்துறையானது இரு முறைகளில் இயங்குகின்றன.



- **நிர்வாகத்துறையின் பொறுப்புகள்**
    - ✓ அரச சேவையினை நிர்வகித்தல்
    - ✓ கட்டளைகளைப் பிறப்பித்தல்
    - ✓ வரவு செலவுத் திட்டத்தினை நிர்வகித்தல்
    - ✓ முப்படைகளையும் பொலிஸ் (காவல்துறை) பிரிவினையும் நிர்வகித்தல்
    - ✓ அரச கொள்கைகள் தொடர்பாக முடிவெடுத்தலும் அதனை நடைமுறைப்படுத்தலும்
    - ✓ சில நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்தல்

- **அரசியல் நிர்வாகம்**
    - ✓ ஜனநாயக ரீதியிலான பிரதமர் தலைமையில் கபினட் செயற்படும். இது காலத்திற்கு காலம் மாற்றமடையும்.

- **ஜனாதிபதி நிர்வாகம்**
    - ✓ ஜனாதிபதி பதவி

- **நிலையான நிர்வாகம்**
    - ✓ இது அரச சேவையினை குறிக்கும். அரசியல் நிர்வாகத்தின் கட்டளைக்கேற்ப சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

- **நீதித்துறை**
    - ✓ இது ஒரு சுதந்திரமான நிறுவனம். இதன் பிரதான கடமை தீர்ப்புகளை வழங்குவதாகும். இதன்போது சுதந்திரமானது இன்றியமையாததொன்றாகும். சட்டத்தினை முன்னெடுத்துச் செல்வது நீதித்துறையின் பொறுப்பு. ஜனநாயகத் தன்மை கொண்ட அரசியலமைப்பினது பாதுகாவலன் அரசியலமைப்பே ஆகும்.

- தற்போதைய இலங்கையின் ஆட்சி மட்டங்கள்
    - ✓ தேசிய மட்டம் (பாராளுமன்றம்)
    - ✓ மாகாண மட்டம் (மாகாண சபை)
    - ✓ பிரதேச மட்டம் (நகர சபை,பிரதேச சபை)

| | நிர்வாகம் | சட்டத்துறை | நீதித்துறை |
|---|---|---|---|
| தேசிய மட்டம்<br><br>மாகாண மட்டம்<br><br>பிரதேச மட்டம் | ஜனாதிபதி<br>அமைச்சரவை<br>அமைச்சின் செயலாளர்<br>மாகாண அரசாங்க அதிபர்<br>மாகாணச் செயலாளர்<br>மாகாண அமைச்சின் செயலாளர்<br>பிரதேச செயலாளர். | பாராளுமன்றம்<br><br>மாகாண சபை<br><br>உள்ளூராட்சி நிறுவனங்கள்<br><br>நகர சபை<br>பிரதேச சபை | உயர் நீதிமன்றம்<br><br>மேல் முறையீட்டு நீதிமன்றம்<br><br>மேல் நீதிமன்றம்<br><br>மாகாண நீதிமன்றம்<br><br>மாவட்ட நீதிமன்றம் |

13 தலைப்பு – **வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு தொடர்பான விடயத்தினை கற்கும்போது நினைவில் கொள்ள வேண்டிய சில முக்கியமான சொற்பதங்கள்**

- இறக்குமதி → வெளிநாடுகளில் இருந்து பொருட்களையும் சேவைகளையும் எமது நாட்டிற்கு கொண்டு வருதல்.
- ஏற்றுமதி → எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு சேவைகளையும் பொருட்களையும் அனுப்புதல்
- தேசிய உற்பத்தி → நாட்டினது மொத்த பொருட்களினதும் சேவைகளினதும் பெறுமதி
- தனிநபர் வருமானம் → ஒரு தனிநபரினது வருமானம்
  மொத்த தேசிய வருமானம் ÷ மொத்த சனத்தொகை = தனிநபர் வருமானம்
- திரவத்தன்மை (பணம்) → குறித்த நாட்டினது பண அலகின் பெறுமதி (பண அலகிற்கு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்களினதும் சேவைகளினதும் அளவினைக் குறிக்கும்)
- பணவீக்கம் → குறித்த நாட்டினது சேவைகள் மற்றும் பொருட்களினது விலை மட்டமானது தொடர்ச்சியாக அதிகரிப்பதனை குறிக்கும்.
- வரவு செலவுத் திட்டத்தின் குறைபாடு → வரவு செலவுத் திட்டத்தின் வருமானத்தினை விட செலவு அதிகமாக காணப்படுதல்
- வரவு செலவுத் திட்டத்தின் மிகைத் தன்மை → வரவு செலவுத் திட்டத்தின் செலவினை விட வருமானம் அதிகம்.

13 தலைப்பு

- முன்பு பார்த்த ஐந்து அமர்வுகளையும் மீள நினைவூட்டல் குழு செயற்பாட்டினூடாக (Card) கடதாசித் துண்டுகளைப் பயன்படுத்தி காரணிகளை (விடயங்களை) வரிசைப்படுத்துதல்




பிரதேச சபை
பிரதான இரண்டு துறைகள்
தீர்மானம் மேற்கொள்ளல்
நடைமுறைப்படுத்தும் அரச அதிகாரிகள்
கமிட்டிகள் 4
நிதி மற்றும் கொள்கையாக்கம் கமிட்டி
சுற்றுச்சூழல் மற்றும்
கைத்தொழில் கமிட்டி
வீடுகள் மற்றும் மக்கள் அபிவிருத்தி கமிட்டி
பிரதேச செயலகம்
பிரதேச செயலகத்தின் ஆரம்பம் 1989
தீர்மானங்களை மேற்கொள்ளல் - பிரதேச செயலகம்
பாராளுமன்றம்
குறித்த அமைச்சு
பரவலாக்கப்பட்ட வ.செ. திட்டம்
பரவலாக்கப்பட்ட வ.செ. திட்டம்
பிரதேசசபை உறுப்பினர்
பிரதேசசபை உறுப்பினர்
பிரதேச செயலகம்
பிரதேச செயலகம்
பிரதேச செயலகம்
மக்களின் கருத்துக்கள்
மக்களின் கருத்துக்கள்
மக்களின் கருத்துக்கள்

*ஏழாவது அமர்வு*

**14. தலைப்பு – பிரதேச சபை வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சியினை கற்றல்**

வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் ஆறாவது அமர்வில் மக்களின் தேவைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியினை ஒப்பீட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்தல்.

குறிப்பு : ஏழாவது அமர்வின் முடிவில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு. பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தினை பகுப்பாய்வு செய்வதனூடாக பொது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்களை ஊக்கப்படுத்துவதாகும்.

*எட்டாவது அமர்வு*

**15. தலைப்பு – வரவு செலவுத்திட்ட பகுப்பாய்வு பாட நெறியினை நிறைவு செய்தல்**

- பயிற்சி கைநூலை தயாரித்து விநியோகித்தல்
- அரச வரவு செலவுத் திட்டத்தினை பகுப்பாய்வு செய்த பயிற்சி குழுக்கள் அல்லது நபர்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்தினையும் அறிவினையும் வெளிப்படுத்துதல்
- எதிர்கால முன்னெடுப்பு யோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் (குழுக்கள்)

குறிப்பு : எட்டாவது அமர்வின் முடிவின்போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு. அறிவினை பகிர்ந்துகொள்ளுதல், பெற்றுக்கொண்ட புதிய அறிவினை நடைமுறைப்படுத்தக்கோரி குழுக்களைத் தூண்டுதல் (ஆர்வத்தினை ஏற்படுத்துதல்)

# நிறைவு

அரச வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு எனும் விடயப் பரப்பினை ஒரு முன் மாதிரி செயற்திட்டமாக செயற்படுத்தக்கோரி அக்ஷன் எயிட் நிறுவனம் பல நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்தது.

குடும்ப சகாய சேவை நிலையம் இச்செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்ததற்கு காரணம், இந்நிலையத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் ஏனைய செயற்திட்டங்களுக்கும் இத்தலைப்பு உறுதுணையாக இருக்கும் எனும் நம்பிக்கையிலேயே ஆகும். இச்செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது, பல மொழிகளில் பரீட்சயம் இன்மை, அத்துடன் திட்டமிட்டபடி இத்திட்டத்தினை பிரசைகள மட்டத்திற்கு (சமூக மட்டம்) கொண்டு செல்ல முடியாமல் போனதன் காரணமாக 5 பெண்கள் குழுக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டமை, அரச நிறுவனங்களில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட இடர்பாடுகள், இதனோடு தொடர்புடைய அதிகாரிகள் ஒரே நேரத்தில் குடும்ப சகாய நிலையத்தில் சேவையாற்றும் அதேவேளை இச்செயற்திட்டத்தினையும் முன்னெடுக்க வேண்டியேற்பட்டமை, தேவையான தகவல்களை வெளிப்படையாக கலந்துரையாடி பகிர்ந்து கொள்வதற்கு காணப்பட்ட தடைகள் போன்ற பல்வேறுபட்ட இடர்பாடுகள் காணப்பட்டாலும் அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும், உணர்வு பூர்வமாகவும் தைரியமாகவும் சேவையாற்றிய குடும்ப சகாய சேவை நிலையத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் மற்றும் நிலைய ஊழியர்களின் ஒத்துழைப்பால் இச்செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது என்தனை பெருமையுடன் தெரிவிக்கின்றேன்.

எமது நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட பெண்கள் குழு உறுப்பினர்கள் மத்தியில் வயது வித்தியாசம், கல்வித் தகைமை வித்தியாசம், புரிந்து கொள்ளக்கூடிய திறன் வேறுபாடுகள் காணப்பட்டாலும் இதனை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்ற விருப்பு, அர்ப்பணிப்பு, ஆர்வம் என்பன அவர்கள் மத்தியில் மிகவும் கூடுதலாக காணப்பட்டது.

எனவே இவ்வாறானதோர் படைப்பினை நீங்கள் கற்றறிந்து மக்களை அறிவூட்டி, வீழ்ச்சிப் பாதையில் செல்லும் எமது நாட்டினை மீட்டெடுப்பதற்கு பங்கேற்க வேண்டியது எங்கள் அனைவரதும் பொறுப்பாகும்.

# நன்றி

- குறித்த செயற்திட்டத்திற்கு பொறுப்பான அக்ஷன் எயிட் நிறுவனத்தைச் சார்ந்த அதிகாரிகளுக்கு நிதியுதவி செய்த்தனையிட்டு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.
- நிகழ்ச்சிகளை நடாத்திய ரவிடுகல் (பிரதான வளவியலாளர்) அவர்களுக்கும்
- வளவியலாளராக கடமையாற்றிய பியரத்ன அவர்களுக்கும் (ஓய்வு பெற்ற அரச கணக்காய்வாளர்)
- நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்த பெல்ட்ரா பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சமன் ஹமன்கொட மற்றும் பிரியந்த அவர்களுக்கும்
- மொழி பெயர்ப்பு உதவியினைச் செய்த அநுர யாபா அவர்களுக்கும்
- ஒத்துழைப்பு வழங்கிய வடமேல்மாகாண முதலமைச்சர் அதுல விஜேசிங்க அவர்களுக்கும்
- ஒத்துழைப்பு வழங்கிய குருணாகல் பிரதேச சபை உறுப்பினர் குமாரசிறி அவர்களுக்கும்
- ஒத்துழைப்பு வழங்கிய குருணாகல் பிரதேச சபை உறுப்பினர் – அஜித் பிரியலால் அவர்களுக்கும்,
- தொடர்ச்சியாக எமக்கு உதவிகள் வழங்கிய குடும்ப சகாய சேவை நிலைய உத்தியோகத்தர்களுக்கும்
- எமக்கு ஊழக்கமளித்த குடும்ப சகாய சேவை நிலைய கள உத்தியோகத்தர்களுக்கும்
- கழுகல்லை – சமகி, தெகதலாவை – புபுது, கொதலகெமி யாவ – கெமுது, வீரசங்கிலியா கம – திரிய சக்தி போன்ற பெண்கள் அமைப்பு உறுப்பினர்களுக்கும்
- எமக்கு உதவி செய்த பெயர் குறிப்பிடாதவர்களுக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

தயாரிப்பு - P. W. பத்ராணி வீரமன்
ஞானவதி காரியவஸம்
வழிகாட்டல் - க்லேரியா டி சில்வா

முற்றும்

“சத்தியத்தினையும் புரிந்துணர்வினையும் படிப்படியாகத்தான் பெற முடியுமே தவிர ஒரே தடவையில் அதனைப் பெற்றுவிட முடியாது”

(அருட்தந்தை – வில்ஸன்)